**O.S.9/2022**

Date : 26.03.2026.

வா.சா.1 : **மார்க்கண்டன்**

வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த Crl.OP.-ன் மனு நகல் மற்றும் டைப் செட் பேப்பர்களும் எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் மனு எனக்கு கிடைத்தது. டைப் செட் பேப்பர் எனக்கு தெரியாது. மேற்படி மனுவுடன் கிரைய ஒப்பந்தமும் இணைக்கப்பட்டு அதுவும் எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் மனு மட்டும் கிடைத்தது. கிரைய ஒப்பந்தம் நான் பெறவில்லை. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜர் ஆனேன் என்றால் சரியல்ல. ஆஜராகவில்லை. காவல்துறையிலிருந்து சம்பந்தப்பட்ட இடத்தில் என்னிடம் பதில் அறிக்கை பெற்று அனுப்பி வைத்தார்கள். சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 1, 2 பிரதிவாதிகள் உடன்படிக்கையில் கண்ட சர்வே எண்.834/11பி, மற்றும் 823/1ஏ சொத்தில் மேற்கடைய 16 அடி பாதை எழுதிக் கொடுக்க சம்மதம் தெரிவிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் சமசர மையத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் அது தவறாகும். எனது உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் ஒப்புக்கொண்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். உயர்நீதிமன்ற சமரச மையத்தில் நான் ஆஜராகினேன் என்றால் சரிதான். அதனடிப்படையில் மேற்படி இரண்டு சர்வே எண்ணிலும் மேற்கடைய 16 அடி அகல பாதை அளவீடு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சமரச மையத்தில் பாதைக்கு எதிர்தரப்பினர் அதிக பணம் என்னிடம் நேரடியாக கேட்டதனாலேயே அது ஒப்பந்தத்தை மீறுவதாக உள்ளதால் நான் சம்மதிக்கவில்லை. என்னிடம் ஒப்பந்தத்திற்கு மீறி அதிகமாக பணம் கேட்டததாக உயர்நீதிமன்றம் சமரச மையத்தில் எழுத்து மூலமாக ஆட்சேபணை எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் உயர்நீதிமன்ற சமரச மையத்தில் சமரசத்திற்கு உடன்படவில்லை என்பதால் இறுதி உத்தரவு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. சமரச மையத்தில் நான் உடன்படிக்கையின் படி பத்திரப்பதிவுக்கு தயாராக இருப்பதாகவே தெரிவித்தேன். சமரச மையத்தில் உடன்படிக்கையின்படி பத்திரப்பதிவுக்கு தாயராக இருப்பதாக எழுத்து மூலமாக எழுதி கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எழுதிக்

கொடுத்தேன். அப்படி எழுதி கொடுத்தது சம்பந்தமாக இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் எதிர்தரப்பினருக்கு பதிவு தபால் மூலமாக பதில் அனுப்பினேன். சமரச மையத்தில் எழுத்து மூலமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் முன்பு மாதிரி கிரைய பத்திரம் பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. முதல் விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி மாதிரி கிரைய பத்திரம் பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் அப்படி சொல்லவில்லை. முதல் விசாரணை வாக்குமூலம் பாரா 5 ல், மாதிரி கிரைய பத்திரம் தயார் செய்து, அதை 1 , 2 பிரதிவாதிகளின் மகன் ராஜேஷ் மூலம் என்னிடம் பிரதிவாதிகள் கேட்டு, நானும் மாதிரி கிரைய ஆவணத்தை தயார் செய்து பிரதிவாதிகளுக்கு அனுப்பி வைத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் சொல்லியுள்ளேன். 09.07.2021ல் மாதிரி கிரைய பத்திரம் தயார் செய்து அனுப்பி வைத்திருந்தேன் என்றால் இல்லை. ஆனால் மாதிரி கிரைய பத்திரம் தாயர் செய்தது என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய முதல் விசாரணை மற்றும் பிராதில் தெரிவிக்கப்பட்ட மாதிரி கிரைய பத்திரம் சம்பந்தமாக ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அப்படி ஒரு மாதிரி கிரைய பத்திரம் ஏற்படுத்தியதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் நினைவில்லை. மாதிரி கிரைய பத்திரத்தில் மேலே தெரிவிக்கப்பட்ட இரண்டு சர்வே எண்களும் அதில் மேற்கடைய 16 அடி பாதைக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும், அதன் காரணமாகவே அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதுபோல அந்த ஆவணத்தில் பாதையை இருவரும் பொதுவாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் என காட்டப்பட்டிருந்தது என்றால் உடன்படிக்கையின் போது பொது பாதை குறிப்பிடப்படவிலலை. பின்னர் அவர்கள் என்னை தொடர்பு கொண்டு பொது பாதைக்கு பேசினர். நான் பணமும் பொதுவாக வைத்துக் கொள்வோம் என கூறினேன். பொது பாதைக்கு பேசியதாகவும், பொதுவாக பணத்தை வைத்துக் கொள்வோம் என பிராது மற்றும் முதல் விசாரணையில் தெரிவிக்கப்படவில்லை என்றால் முதல் விசாரணையில் கேள்வி கேட்கப்படவில்லை. முதல் விசாரணை என்பது நானாகவே தயார் செய்வது என்பதால் அதை யாரும் அதற்கு முன்பு கேள்வி கேட்கப்பட முடியாது என்றால் சரியல்ல. நான் உடன்படிக்கைக்கு மாறாக செயல்படுவதால் தான் முன்னுக்கு பின் முரணாக பிராதிலும், முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புல வரைபடம் சர்வே எண்.823 சம்பந்தமானது என்றால் சரியாக எனக்கு தெரியவில்லை. சர்வே எண்.823 சம்பந்தமாக புலப்படம் பார்த்துள்ளேன். சர்வே எண்.823 ல் 3 ஏ, 3 பி, 3 பி2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சம்பந்தப்பட்ட புலவரைபடத்தை அவர்கள் எனக்கு கொடுக்கப்பட்டதை பார்த்த பொழுது, அதில் மூன்று உட்பிரிவுகள் இருந்தது. அந்த புலவரைபடத்தைநான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் தாக்கல் செய்யலாம். நான் பிராதில் தெரிவித்த சொத்து விபரத்திலும், உடன்படிக்கையிலும் சர்வே எண்.823/3 பி2 காட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் பிராதில் தெரிவிக்கப்பட்ட எல்கை விபரம் சர்வே எண்.82/ 3 பி2 க்கு தெற்கு பக்கம்தான் ரோடு செல்கிறது என்றால் சரியல்ல. நான் 27.07.2021 ல் கொடுத்த புகார் மனுவிற்கு முன்பு ராஜேஷ் என்பவரை சந்தித்தேனா என்றால் சந்தித்து பேசியுள்ளேன். எங்கு வைத்து சந்தித்தேன் என்றால் 26.07.2021 ல் பி.எஸ்.என்.எல். கல்லூரியில் வைத்து சந்தித்தேன். 26.07.2021 ல் பி.எஸ்.என்.எல். கல்லூரியில் வைத்து சம்மந்தமாக அங்குள்ள சி.சி.டி.வி. கேமரா புட்டேஜ் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய இயலாது. 26.07.2021 பி.எஸ்.என்.எல். கல்லூரிக்கு சென்றதும் கிடையாது என்றும், ராஜேஷ் என்பவரை சந்திக்கவில்லை என்றும், புகார் மனு கொடுக்க வேண்டி பொய்யாக அவ்வாறு தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 புகார் மனுவில், ரூ.3 லட்சத்துக்கு நான் நகையை அடகு வைத்து கொடுத்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரூ.3 லட்சம் ரூபாயை எந்த வங்கியில் அடகு வைத்து கடன் பெற்றேன் என்றால் தெரிந்த நபரிடம் அடமானமாக பெற்றேன். அடமானம் பெற்றது சம்பந்தமாக ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் கிடையாது. ரூ.25 ஆயிரம் நண்பனிடம் கடன் பெற்றுள்ளேன் என்று சொல்வதற்கும் ஆவணம் கிடையாது என்றால் நினைவில்லை. என்னிடம் போதிய பண வசதி இல்லாத காரணத்தினால்தான் நகையை அடகு வைத்தும், நண்பர்களிடம் பணம் பெற்றேன் என்றும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் காவல்துறையினரிடம் புகார் கொடுத்த உடனே 2 ம்பிரதிவாதி கோசலை என்பவர் எனக்கும், நாங்குநேரி காவல் ஆய்வாளருக்கும் கடிதம் அனுப்பியிருந்தார் என்றும், அதில உடன்படிக்கையில் கண்ட இரண்டு நம்பர் சொத்தில் மேற்கடைய நிலத்தை எழுதி கொடுக்க தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார் என்றால் சரிதான். ஆனால், 4 சர்வே எண்களும் குறிப்பிடாத காரணத்தினால், 4 சர்வே எண்கள் உண்டு என்று காவல்நிலையத்தில்

தெரிவித்துள்ளேன். நான் உடன்படிக்கையில் இரண்டு சர்வே எண்களை நானாகவே எழுதி, திருத்தியுள்ளேன் என்றும், அதனடிப்படையில் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சர்வே எண்கள் எதிர்தரப்பினர்கள் சொன்னதன் பேரிலேயே உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டது. அவர்கள் சொன்னதன் அடிப்படையில் எழுதப்பட்டதாக கூறுவது தவறு என்றும், அவர்கள் மேற்படி சர்வே எண் குறித்து கூறப்படாத காரணத்தினால் தான் அதில் கையொப்பம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டது கிடையாது என்றால் தவறாக உள்ளது. வா.சா.ஆ.7 என்னால் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. 21.12.2021ல் 1, 2 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலமாக நான் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு 2ம் பிரதிவாதி, என்னுடைய வழக்கறிஞருக்கு பதில் அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.9 பதில் அறிவிப்பு என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் நான் போடவில்லை. அவர்கள் வழக்கறிஞருக்கு அனுப்பியதாகும். பதில் அறிவிப்பில் என்ன சொல்லியுள்ளார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் அதை நான் படிக்கவில்லை. பதில் அறிவிப்பிலும், உடன்படிக்கையில் கண்ட 2 சர்வே எண்.823/1ஏ மற்றும் 834/11பி பொறுத்து கிரைய பத்திரம் எழுதி கொடுப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் செய்திருந்த விவசாயம் செய்யப்பட்ட சோளம் மற்றும் வேலியை அழித்தீர்கள் என்றால் சரியல்ல. விவசாயம் செய்யப்படவில்லை. அதுசம்பந்தமாக நாங்குநேரி காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் பொய்யாக புகார் கொடுத்திருந்தார். அந்த புகாரின் அடிப்படையில் விசாரிக்கப்பட்ட விசாரணையில், நான் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் நுழையக்கூடாது என தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல. அதன்பின்னிட்டுதான் இந்த வழக்கு தாக்கல் நான் செய்தேன் என்றால் 24.01.2022ல் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.1 உடன்படிக்கையை திருத்தி மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் தெரிவிக்கப்பட்ட சொத்து விபரமும், வா.சா.ஆ.1ல் தெரிவிக்கப்பட்ட சொத்து விபரமும் வேறு வேறானது என்றும், அதனால் நிறைவேற்றத்தக்க பரிகாரம் வழங்க இயலாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் குடியிருந்து வருவதால்தான் தபசில் சொத்தில் அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மோசடியாக வா.சா.ஆ.1 உற்பத்தி

செய்து, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு போதிய பண வசதி கிடையாது என்றும், அதனால் தான் ஒப்பந்தப்படி ஒப்பந்தத்தில் கண்ட சர்வே எண்.834/11 பி, மற்றும் 823/1 ஏ ல் கண்ட சொத்தை பத்திரப்பதிவு செய்ய தயாராக இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ய வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.